# பெண்கள் கல்வியும் தஃவாப் பணியும்

அஷ்ஷெய்க் எஸ். எச். எம். இஸ்மாயில் ஸலபி (B.A)
ஆசிரியர், உண்மை உதயம்

பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பர். ஆனால், அண்மைக்காலம் வரை அந்தக் கண்கள் கல்லாமை, அறியாமை எனும் கறுப்புத் துணிகளால் கட்டிப் போடப்பட்டிருந்தன என்பதுதான் கசப்பான உண்மையாகும். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பதற்கு என்ற சிந்தனையும், அதிகம் கற்றால் பெண் புருவுத்தன்மையை (ஆண்மையை) அடைந்து விடுவாள் என்ற அச்சமும் அண்மைக்காலம் வரை சமுகத்தில் நிலவி வந்தன.

ஆனால் உலகமகா யுத்தங்களின் பின்னர் உயிரிழந்த, உடல் ஊனமுற்ற பல இலட்சம் ஆண் தொழிலாளர்களின் இடத்தை நிரப்பும் நிர்ப்பந்தம் பெண்களுக்கு ஏற்பட்டது. அதனால் பெண் தொழிலாளர்கள் அதிகரித்தனர். எனினும், சம்பளம், கடமை புரியம் நேரம், மேலதிகாரிகளின் சில்மிசங்கள் என பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கண்ட பெண்கள் தமது உரிமைகளுக்காக குரல் கொடுத்தனர். காலப்போக்கில் பொருளாதார வளர்ச்சியில் பெண் புறக்கணிக்க முடியாத அங்கமானாள். இதனால் பெண்களுக்கு மத்தியில் சில பௌதீக ரீதியிலான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. (கூடவே பல்வேறுபட்ட சமூக சவால்களையும் அவர்கள் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்த நிலை நீடிப்பது தனி விடயம்) பெண் சகல துறைகளிலும் பங்காற்றத் துவங்கினாள்.

இதன் விளைவாக பெண்கள் மத்தியில் கற்க வேண்டும் என்ற சிந்தனை மேலெழுந்து இன்று சகல துறைகளிலும் ஆண்களுக்குப் போட்டியாக அவர்கள் களமிறங்கியுள்ளனர்.

**இஸ்லாத்தில் பெண் கல்வி:**

ஆண்களுக்கான கல்வி பற்றியே கரிசனை காட்டப்படாத காலகட்டத்தில் எவ்வித பொருளாதார அரசியல் நிர்ப்பந்தங்களும் இல்லாமலேயே பெண்களுக்குக் கல்வி தேவை என்பதை மார்க்கக் கடமையாகவே போதித்தது இஸ்லாம்.

**கல்வியைத் தேடிக் கற்பது அனைத்து முஸ்லிம்கள் மீதும் கடமையாகும்** (இப்னு மாஜா) மேற்படி நபிமொழி கல்வி கற்பதை அதுவும் தேடிக் கற்பதை ஆண் பெண் அனைவருக்கும் மார்க்கக் கடமையாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றைய அறியாமைக் காலத்தில் அடிகைள் மிருகங்கள் போல் நடாத்தப்பட்டனர். அத்தகைய அடிமைப் பெண்களுக்குக் கல்வியைக் கற்றுக்கொடுப்பதைக் கூட இஸ்லாம் வலியுறுத்தியது. இதனைப் பின்வரும் நபிமொழி உணர்த்துகின்றது.

"யாரிடம் ஓர் அடிமைப் பெண் இருந்து அவர் அப்பெண்ணுக்கு ஒழுக்கம் போதித்து அதையும் நல்லமுறையில் போதித்து, அவளுக்குக் கற்றுக்கொடுத்து அதையும் நல்லமுறையில் கற்றுக்கொடுத்து பின் அவளை விடுவித்து தான் திருமணமும் செய்து கொள்கின்றாரோ அவருக்கு இரண்டு விதமான நற்கூலிகள் வழங்கப்படும்" என நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள். (புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸஈ, இப்னுமாஜா, அஹ்மத்)

அடிமைப் பெண்ணுக்கே கல்வி கற்றல் அவசியம் எனும் போது இஸ்லாம் பெண் கல்விக்கு எத்தனை முக்கியத்துமளித்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு ஆணின் கல்வியை விட பெண்ணின் கல்வி பெரியளவில் குடும்பத்திற்குப் பயன்பாடாக அமையும். ஏனெனில் பெண்தான் அடுத்த சந்ததியை வளர்த்து சீர்செய்யும் பொறுப்பில் பெரும்பங்கை வகிக்கின்றாள்.

**பெண்ணின் பொறுப்பு:**

கற்பது என்பது வெறுமனே சேர்டிபிகட்டுக்காகவோ, தொழில் பெறுவதற்கான ஒரு அடிப்படையாகவோ இஸ்லாம் கருதவில்லை. கற்றல் என்பது செயல்படவும் பிறருக்கு கற்றுக் கொடுப்பதற்குமான ஒரு அம்சமாகும். இந்த வகையில் நல்ல கல்வியைக் கற்று தானும் அதன்படி அமல்செய்து பிறருக்கும் அதை எடுத்துக் கூற வே வண்டும். பிறருக்குக் கூறாத கல்வி பயன்படுத்தப்படாமல் பூமிக்கடியில் இருக்கும் புதையலைப் போன்று பயனற்றதாகும் என சல்மான் பாரிஸ் (ரலி) அவர்கள் குறிப்பிட்டது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் நபித் தோழியர்களது வாழ்வை ஆராய்ந்தால் இஸ்லாம் கூறிய பிரகாரம் கல்வியைத் தேடுவதில் அவர்கள் அதிகளவில் ஆர்வம் காட்டியுள்ளனர். நபி(ஸல்) அவர்களிடம் வந்து மார்க்க விளக்கங்களைக் கேட்டுப் பெற்றுள்ளனர். அதேவேளை பொதுவாக மார்க்க விளக்கம் கூறுவது போக தமக்கெனவே தனியான ஒரு நாளை ஒதுக்கித் தருமாறு நபி(ஸல்) அவர்களிடம் கேட்டு அந்நாளில் வந்து நபி(ஸல்) அவர்களிடம் மார்க்கக் கல்வியைக் கற்றுள்ளனர். (புகாரி)

இவ்வாறு கற்ற பெண்கள் தாம் பெற்ற கல்வியைப் பிறருக்கும் கற்றுக்கொடுத்துள்ளனர். இவ்வகையில் ஒரு பெண் மார்க்கத் தெளிவைப் பெற்று தான் வளர்க்கும் தனது அன்புக் குழந்தைகளை மார்க்க நெறிக்கமைய வளர்க்கும் பணியை அவசியமாக செய்தேயாக வேண்டும்.

அத்துடன் தன்னைச் சூழவுள்ள பெண்களிடம் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் சத்தியத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களிடம் காணப்படும் புறம்பேசுதல் பொய் கூறுதல் அவதூறு கூறல் அறைகுறை ஆடை அணிதல் மூட நம்பிக்கைகள் போன்ற தவறுகளை பக்குவமாக எடுத்துக் கூறித் திருத்தும் கடமையும் பெண் மீதுள்ளது.

ஆயிஷா, ஹப்ஸா, உம்மு ஸல்மா, உம்மு சுலைம் போன்ற பல பெண்கள் ஆண்களுக்கே மார்க்கச் சட்டங்களைக் கற்றுக்கொடுத்திருப்பதை வரலாற்றில் காணலாம்.

இவ்வகையில் பெண்களுக்கும் சமூகப் பொறுப்புள்ளது. நபி(ஸல்) அவர்களது காலத்துப் போர்களில் கூட பல பெண்கள் பங்குகொண்டுள்ளனர். முஸ்லிம் சமூகத்தின் சோதனையான வேளைகளில் தமது மேலில் இருந்த தங்க ஆபரணங்களைக் கூட கழற்றிக் கொடுத்து தர்மம் செய்து தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டுள்ளனர்.

**தஃவாவில் துணை:**

இதேவேளை த:்வாப் பணியில் ஈடுபடும் மு:்மினான ஆண்களுக்குத் துணையாக இருக்கவேண்டிய கடமையும் பெண்களுக்குண்டு. இது குறித்து குர்ஆன் கூறும் போது,

**"மு:ஃமினான ஆண்களும் மு:ஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்யத் தூண்டுகிறார்கள் தீயதை விட்டும் விலக்குகிறார்கள், தொழுகையைக் கடைப்படிக்கிறார்கள், (ஏழை வரியாகிய) ஜகாத்தை (முறையாகக்) கொடுத்துவருகிறார்கள், அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகிறார்கள், அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்."** (9:71)

என்று கூறுகின்றது. இதற்கு நேர்மாறாக தீமையை ஏவி நன்மையைத் தடுக்கும் தீய பணியில் முனாபிக்கான ஆண்களும் பெண்களும் ஈடுபடுவதாகக் குர்ஆன் கூறுகின்றது. இது பற்றிக் குர்ஆன் குறிப்பிடும் போது,

**"நயவஞ்சகர்களாகிய ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்றவரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தீமையை ஏவி நன்மையைத் தடுக்கின்றனர்...."** (9:67)

என்று கூறுகின்றது. இங்கே நாம் கவனிக்கவேண்டிய முக்கியதொரு அம்சம் உள்ளது.

முனாபிக்கான ஆண் பெண் பற்றிக்கூறும் போது "ப.்.ழுஹும் மின்ப.்.ழ்" சிலர் சிலரைச் சேர்ந்தவர்கள். அதாவது அவர்கள் ஆண் பெண் கலப்புடன் ஒன்றுடன் ஒன்று கலந்து தமது தவறிய பிரச்சாரத்தைச் செய்வர்.

மு.்.மின்களைப் பொறுத்தவரை ஆண்களும் பெண்களும் சிலர் சிலருக்கு நல்லவையை ஏவுவதிலும் தீயதைத் தடுப்பதிலும் ஒத்துழைப்பர் என்று கூறப்படுகின்றது. எனவே, ஆண்களுடன் பெண்கள் த.்.வா பணியில் ஒத்துழைக்க வேண்டும் எனும்போது இஸ்லாமிய வரையறைகள் மீறப்படாமல் கலப்பு இல்லாமல் இப்பணி செய்யப்பட வேண்டும் என்பதைப் புரியலாம்.

எனவே, இஸ்லாமியப் பெண்கள் இஸ்லாமிய நெறிகளைப் பேணி இஸ்லாம் வலியுறுத்தியுள்ள கல்வியைக் கற்று த.்.வாப் பணியில் ஈடுபட முன்வர வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் தவ்பீக் செய்வானாக!

தம்மிடமுள்ளதை ஒரு சமுதாயம் மாற்றிக்கொள்ளும் வரை அச் சமுதாயத்தில் உள்ளதை அல்லாஹ் மாற்ற மாட்டான்.

(அல்-குர்ஆன் - 13:11)

எந்தவொரு ஆணோ அல்லது பெண்ணோ ஈமான்கொண்ட நிலையில் நல்லதை செய்தால் அவருக்கு நாம் மகிழ்ச்சியான வாழ்வைக் கொடுத்து வாழச் செய்வோம்.

(அல்-குர்ஆன் - 16:97)